

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | நவம்பர் 02, 2017 | புரட்சி 16 | முழக்கம் 42 | விலை: ரூ.3.00


## அர்ச்சகர் பயிற்சி பெற்ற அனைத்து ஜாதியினரையும் பணியில் அமர்த்து!

# தலைமைச் செயலகம் முற்றுகை! 150 பேர் கைது!






தமிழக அரசின் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளில் வேத, ஆகம, வழிபாட்டு முறை ஆகியவற்றைக் கற்று, உரிய சமயத் தலைவர்களிடம் தீட்சையையும் பெற்ற 206 பேர் கடந்த பல ஆண்டுகளாக பணி அமர்த்தப்படாமல் காத்துக் கிடக்கின்றனர். அவர்களது நியமனத்துக்கு எதிராக ஆதி சைவ சிவாச்சாரிகள் நல சங்கம் என்ற பெயரில் உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு 2015 டிசம்பரில் தீர்ப்பளிக்கப்பட்டுவிட்டது.

அந்த தீர்ப்புக்குப் பின்னர்தான், கேரள அரசு 6 தாழ்த்தப் பட்டோர் உள்பட 36 பார்ப்பனர் அல்லாதாரை தேவஸ்வம்போர்டு கோயில்களில் நியமித்து, அவர்கள் பணியில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கிவிட்டார்கள். கேரள அரசைத் தொடர்ந்து கர்நாடக அரசும் அனைத்து ஜாதியினரையும் அர்ச்சகராக நியமிக்கப் போவதாக அறிவித்து விட்டது.

இந்த நிலையில், தமிழகம்தான் அனைத்து ஜாதியினரையும் அர்ச்சகராக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை கடந்த 90 ஆண்டுகளாக பல்வேறு வழிகளில் வலியுறுத்தும் மாநிலமாக இருந்து வருகிறது.

இனியும் தமிழக அரசு எவ்வித சலனமும் இன்றி அமைதி காக்கக் கூடாது; உரிய பயிற்சியில் தேர்ச்சி அடைந்துள்ள 206 பேரையும், மேலும் காலம் தாழ்த்தாது, தமிழக அரசின் இந்து அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களில் உடனடியாக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, தலைமைச் செயலக முற்றுகைப் போராட்டம், சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தினரால் ஒருங்கிணைக்கப்பட்டது.

30.10.2017 திங்கள் அன்று காலை 10 மணியளவில் சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகைக்கு முன்புறம் கூடி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் தலைமைச் செயலகம் நோக்கிப் புறப்பட்டபோது சிறிது தூரத்திலேயே காவல்துறை தடுத்து நிறுத்தி கைது செய்தது. 25 பெண்கள் உள்பட 150 பேர் கைது செய்யப்பட்டனர்.

போராட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் நாமக்கல் சாமிநாதன், காஞ்சிபுரம் இரவி பாரதி, திருப்பூர் முகில்ராசு, சூலூர் பன்னீர்செல்வம், கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, மாநில பொருளாளர் திருப்பூர் துரைசாமி, விழுப்புரம் அய்யனார், ‘இளந்தமிழகம்’ செந்தில், ‘ஜாதி ஒழிப்பு விடுதலை முன்னணி’ ஜெயநேசன், ‘அனைத்துத் தமிழ்நாடு மாணவர் கழகம்’ சரவணன், ‘பெரியார் சிந்தனையாளர் இயக்கம்’ தீனா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கைது செய்யப்பட்ட அனைவரையும் சிந்தாதிரிப்பேட்டை சமூக நலக் கூடத்தில் தடுத்து வைத்திருந்த காவல்துறை மாலை 6 மணிக்கு விடுதலை செய்தது.

# பெட்ரோலியக் கொள்ளையில் பா.ஜ.க. அரசின் பங்கு!

**பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன்**

பெட்ரோலியப் பொருட்களின் விலை இந்தியச் சந்தையில் உயர்ந்து காணப்படுவதுடன் தொடர்ந்து உயர்ந்தும் வருகிறது. உலகச் சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை முன்பு இருந்ததை விடக் குறைவாக இருந்தாலும் இங்கு அதீத விலைக்கு விற்கப்படுவதற்குக் காரணம் ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் மிக அதிக அளவில் அவற்றின் மீது விதிக்கும் பல்வேறு வரிகளே. ரூ.21.50 அடக்க மாகும் ஒரு லிட்டர் பெட்ரோல் மீது வரி விதித்து லிட்டர் ஒன்றுக்கு ரூ.70-80 வரை விலையை வசூலித்து அரசுகள் ஒரு மாபெரும் வரிக் கொள்ளையில் ஈடுபடுகின்றன என நாம் வெளிச்சம் போட்டு காட்டியிருந்தோம். பல ஊடகங்களும், ஊடக விவாதங்களும் இதனை எடுத்துக் கூறின. வலைத் தளங்களிலும் ஆளும் பா.ஜ.க. அரசு கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி வருகிறது. இந்த விமர்சனங்களை எதிர்கொள்ளப் பா.ஜ.க.வினரும் அதன் ஆதரவாளர்களும் பல தந்திர வேலை களில் ஈடுபடுகின்றனர். அவர்கள் அப்படி ஈடுபடாவிட்டால் தான் நாம் ஆச்சரியப்பட வேண்டும். அந்தத் தந்திரங்களில் ஒன்று என்னவென்றால் தாங்கள் பெட்ரோலியப் பொருட்கள் மீது விதிக்கும் கலால் வரியில் ஏறத்தாழ 42 விழுக்காடு மாநில அரசுகளுக்குப் பிரித்தளிப்பதாக ஒரு பச்சைப் பொய்யை அவிழ்த்து விடுகின்றனர். அவர்களின் வாதம் எப்படி தந்திரமானது என்பதைக் காண்போம்.

முதலாவதாக, கலால் வரியில் 42 விழுக்காடு மாநில அரசுகளுக்கு பிரித்தளிக்கப்படுகிறது என்பது ஒன்றிய அரசின் கருணைக் கொடை அல்ல.

(4 ஆம் பக்கம்)

தலையங்கம்

## ‘தேவ-அசுரப்’ போராட்டம் முடியவில்லை

காந்தியை கொன்றது ஆர்.எஸ்.எஸ். இல்லை; அதற்கான சான்றுகளும் இல்லை என்று பா.ஜ.க.வினர் தொலைக்காட்சி விவாதங்களில் சாதிக்கிறார்கள். அவர் ஆர்.எஸ்.எஸ்.காரரா? அதில் உறுப்பினரா? என்பதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். கோட்சே ஒரு ‘சித்பவன்’ பார்ப்பனர்; அவரை காந்திக்கு எதிராக துப்பாக்கி தூக்க வைத்தது. அவரிடமிருந்த ‘இந்துத்துவம்’ என்ற அரசியல் மதவெறி என்பதை அவர்கள் மூடிமறைக்கப் பார்க்கிறார்கள். காந்தி கொலையில் தூக்கிலிடப்பட்ட நாதுராம் கோட்சே, நாராயணன் ஆப்தே இருவருமே பார்ப்பனர்கள். “சங்பரிவார் குடும்பத்தில் வளர்ந்தவர்கள் நாங்கள்” என்று இந்தக் கொலையில் குற்றம்சாட்டப்பட்டு ஆயுள் தண்டனையில் 15 ஆண்டுகாலம் கழித்து பிறகு விடுதலை செய்யப்பட்ட நாதுராம் கோட்சேயின் தம்பி கோபால் கோட்சே வெளிப்படையாகவே கூறுகிறார்.

இப்போது உச்சநீதிமன்றத்தில் காந்தி கொலை குறித்து ஒரு வழக்கு – காந்தி கொலை நடந்து முடிந்து சுமார் 70 ஆண்டுகளுக்குப் பிறகு வந்திருக்கிறது. மும்பையைச் சார்ந்த ‘அபினவ் பாரத்’ என்ற அமைப்பைச் சார்ந்த டாக்டர் பங்கஜ் பத்னிஸ் என்பவர் இந்த வழக்கை தொடர்ந்திருக்கிறார். ‘காந்தியை மூன்று முறை மட்டுமே கோட்சே சுட்டார். ஆனால் காந்தி உடலில் 4ஆவது குண்டு பாய்ந்திருக்கிறது. அது எப்படி வந்தது? அந்த நான்காவது குண்டுதான் காந்தியின் உயிரை எடுத்திருக்கிறது. இது குறித்து விசாரிக்க 1966ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட நீதிபதி கபூர் ஆணையம் இது குறித்து விசாரிக்கவில்லை. கோட்சே பயன்படுத்திய இத்தாலி பெரட்டராகம் சிறிய துப்பாக்கியை அவருக்கு தந்தவர் கங்காதர் தாண்டவே என்பவர். இந்த தாண்டவே, ஜெகதீஸ் கோயல் என்பவரிடமிருந்து இந்த துப்பாக்கியை பெற்றிருக்கிறார். இதற்கு மேல் 4ஆவது துப்பாக்கி குண்டு எங்கிருந்து வந்தது? இதை விசாரிக்க வேண்டும் என்கிறார் மனுதாரர்.

காந்தி உடலில் பாய்ந்த மூன்று குண்டுகளின் துப்பாக்கி பதிவு எண்.606824. ஆனால் காந்தியின் உடலில் பாய்ந்த நான்காவது துப்பாக்கி குண்டு வேறு துப்பாக்கியிலிருந்து வந்தது. அதன் பதிவு எண் வேறு என்று 1948ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட காவல்துறை விசாரணை குறிப்பிடு வதையும் மனுதாரர் சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்த வழக்குக்கு நீதிமன்றத்துக்கு ஆலோசனை தந்த உதவிட நீதிபதிகள் அமரேந்தர் என்ற மூத்த வழக்கறிஞரை நியமித்துள்ளனர்.

இந்த நிலையில் இது குறித்து இந்து மகாசபையின் தேசியத் துணைத் தலைவராக இருக்கும் அஷோக் சர்மா எனும் பார்ப்பனர் விடுத்துள்ள அறிக்கையை ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு வெளியிட்டுள்ளது. அவர் கூறுகிறார்: “காந்தியை சுட்டுக் கொன்றது இந்து மகாசபையைச் சார்ந்த கோட்சேதான். **அது எங்கள் பெருமை.** நான்காவது குண்டு குறித்து தேவையில்லாமல் சர்ச்சையை எழுப்பி வருகிறார்கள். பா.ஜ.க.வும் ஆர்.எஸ்.எஸ்.சும் இந்து மகாசபை மரபை அழிக்கக் கூடாது. கோட்சேயின் அடையாளத்தை இந்து மகாசபையி லிருந்து பிரிக்க முடியாது” – என்று கூறியிருக்கிறார். கோட்சேவுக்கு சிலை வைக்கும் முயற்சிகள்கூட கடந்த காலத்தில் நடந்தன.

காந்தியை துளைத்த அதே குண்டுகள்தான், இப்போது தபோல்கர், கல்புர்கி, பன்சாரே, கவுரி லங்கேஷையும் துளைத்திருக்கின்றன. மதவெறி சக்திகளை எதிர்த்தவர்கள்; மூடநம்பிக்கைகளுக்கு எதிராக அறிவியல் சிந்தனைகளை பரப்பியவர்கள் என்பதற்காகவே கருத்துத் தளத்தில் பணியாற்றியவர்களை குறி வைக்கின்றனர் கோட்சேவின் வாரிசுகள்.

பார்ப்பன வேதமதம் – வரலாற்றில் ‘வேத தர்மங்களை’ எதிர்த்தவர்களுக்கு அசுரர்கள் பட்டம் சூட்டி அவர்களை அழித்தே வந்திருக்கிறது. ‘தேவ–அசுர’ப் போராட்டங்கள் என்பவைகளே ஆரியர்–திராவிடர் போராட்டம்தான். ‘அசுரர்’களை அழிப்பதற்கு சூழ்ச்சிகளையும் திரைமறைவு சதிகளையும் பார்ப்பனர்கள் பின்பற்றியிருக்கிறார்கள். திராவிடர்களான அசுரர்கள் அழிப்பையே ‘தீபாவளி’, ‘சூரம்சம்ஹாரம்’, ‘பிரம்மோத்சவம்’ என்ற பண்டிகைத் திருவிழாக்களாக்கி அதை பாதிக்கப்பட்ட ‘திராவிடர்’ களையே கொண்டாட வைப்பதில் பார்ப்பனியம் வெற்றி பெற்று விட்டது.

மசூதியை இடித்துத் தள்ளியவர்கள்; மாட்டுக்கறி உண்போர்; மாட்டுத் தோல் வணிகம் செய்வோரை கொலை செய்கிறவர்கள்; எதிர்த்துக் கேள்வி கேட்டால் ‘தேசவிரோத’ சட்டத்தை ஏவி அடக்குகிறவர்கள் – இந்துத்துவப் பார்ப்பனிய சக்திகள்தான். வேதகாலத்தில் தொடங்கிய இந்த அழிப்பும் கொலையும் இப்போதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதனால்தான் காந்தியை கொலை செய்தது நாங்களே என்று இப்போதும் அவர்கள் மார்தட்டுகிறார்கள்.

சமூக விடுதலைக்குப் போராடும் திராவிடத் தமிழர்கள், இந்தப் போராட்டத்தின் முதன்மையான எதிரிகளை இப்போதாவது அடையாளம் காண வேண்டும்.

# ‘வந்தே மாதரம்’ சந்தித்த வழக்குகள்!

தேசியப் பாடலான வந்தே மாதரத்தை அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பாடுவதைக் கட்டாயமாக்கி உத்தரவிட்டிருக் கிறது, சென்னை உயர் நீதிமன்றம். அனைத்து அரசு மற்றும் தனியார் அலுவலகங்களிலும் மாதம் ஒரு முறை வந்தே மாதரம் கட்டாயம் பாடப்பட வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறது உயர் நீதிமன்றம். 2013-ல் பட்டதாரி ஆசிரியர் பணிக்கான தேர்வு எழுதிய வீரமணி என்பவர் தொடர்ந்த வழக்கில் அளிக்கப்பட்ட உத்தரவு இது.

வந்தே மாதரம் முதலில் எழுதப்பட்டது எந்த மொழியில் என்ற கேள்விக்கு வங்காளம், உருது, மராத்தி, சம்ஸ்கிருதம் ஆகிய நான்கு விடைகளில் வங்காள மொழியைத் தேர்ந்தெடுத்ததாகவும், ஆனால் சம்ஸ்கிருதம்தான் சரியான விடை என்று ஆசிரியர் தேர்வு வாரியம் கூறியதாகவும், அந்தக் கேள்விக்கு ஒரு மதிப்பெண் அளித்தால், தான் தேர்வில் வெற்றிபெற்று ஆசிரியர் ஆகிவிட வாய்ப்புள்ளதாகவும் தனது மனுவில் வீரமணி குறிப்பிட்டிருந்தார்.

தவறான கேள்விக்கு ஒரு மதிப்பெண் வழங்க வேண்டும் என்பதுதான் அவரது கோரிக்கை. ஆனால், இந்த வழக்கில் துளியும் சம்பந்தம் இல்லாமல் மக்கள் அனைவரும் வந்தே மாதரம் பாடலைக் கட்டாயமாக பாட வேண்டும் என்று தீர்ப்பளித்திருப்பதுதான் விவாதத்தை ஏற்படுத்தி உள்ளது.

### கேரள வழக்கு

உச்ச நீதிமன்றத்தில் தேசிய கீதம் தொடர்பாக 1986-ல் நடைபெற்ற ஒரு வழக்கைப் பார்ப்போம். கேரள மாநிலம் கோட்டயத்தைச் சேர்ந்த பிஜு இமானுவேல் என்ற 15 வயது மாணவனும், அவனது சகோதரிகளான பினோ மோள், பிந்து இமானுவேலும் பள்ளியில் தேசிய கீதம் பாடப்படுகையில் எழுந்து நிற்பார்கள். ஆனால், பாட மாட்டார்கள். ஜெகோவா விட்னஸ் என்ற கிறித்துவ மதப் பிரிவைச் சேர்ந்த அவர்கள், தங்கள் மத விதிகளின்படி, ஜேகோவாவைத் தவிர வேறு யாரையும் வாழ்த்தி எந்தப் பாடலையும் பாடக் கூடாது. அவர்கள் தேசிய கீதத்தைப் பாடாததன் பின்னணி இதுதான்.

இது ஒரு பத்திரிகையில் செய்தியாக வந்ததையடுத்து, காங்கிரஸ் எம்.எல்.ஏ. வி.சி.கபீர் இதுகுறித்து சட்ட மன்றத்தில் பிரச்சினை எழுப்பினார். இதை விசாரிக்க ஒரு நபர் குழுவை அப்போதைய காங்கிரஸ் முதல்வர் கருணாகரன் அமைத்தார். ‘தேசிய கீதம் பாடப்படுகையில், இந்தப் பிள்ளைகள் அமைதியாக எழுந்து நிற்கின்றன, தேசிய கீதத்துக்கு எவ்விதமான அவமரியாதையும் செய்யவில்லை’ என்று அறிக்கை அளித்தது குழு.

ஆனால், தேசிய கீதம் பாடுவோம் என்று எழுதிக் கொடுத்தால் மட்டுமே பள்ளியில் சேர்த்துக்கொள்ள முடியும் என்றது மாவட்ட நிர்வாகம். மூவரும் மறுத்தனர். இதையடுத்து, பள்ளியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டனர். மாணவர்களின் பெற்றோர்கள் கேரள உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். தேசிய கீதத்தில் கடவுளைப் புகழும் வாக்கியங்கள் இருக்கின்றனவா என்று ஆராய்ந்த உயர் நீதி மன்றம், மாணவர்கள் தேசிய கீதம் பாடாதது தவறு என்று தீர்ப்பளித்தது. அவர்களின் பெற்றோர் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர்.

வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சின்னப்ப ரெட்டி மற்றும் எம்எம்.தத் ஆகியோர் அடங்கிய அமர்வு, “ஒருவர் தேசிய கீதம் பாடியே ஆக வேண்டுமென கட்டாயப்படுத்தும் எந்தச் சட்டமும் இல்லை. அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 51-ஏ வின்படி ஒரு குடிமகன், அரசியல் அமைப்புச் சட்டத்தையும், தேசியக் கொடியையும், தேசிய கீதத்தையும் மதிக்க வேண்டும் என்றே கூறப்பட்டுள்ளது. தேசிய கீதம் இசைக்கப்படுகையில் எழுந்து நின்று மரியாதை செய்கின்றனர். எனவே, ஒன்று சேர்ந்து பாடாத காரணத்தால், அவமரியாதை ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்க முடியாது.

இந்த வழக்கில் மாணவர்களின் பேச்சுரிமை மற்றும் கருத்துரிமை மற்றும் மதத்தைப் பின்பற்றுவதற்கு அரசியல் சாசனம் தந்த உரிமை ஆகியவை மீறப்பட்டிருப்பதாகக் கருதுகிறோம்" என்று கூறி, அவர்களை மீண்டும் பள்ளியில் சேர்க்க உத்தரவிட்டது. “நமது பாரம்பரியம் நமக்கு சகிப்புத் தன்மையைக் கற்றுத் தந்துள்ளது. நமது தத்துவங்கள் சகிப்புத்தன்மையை வலியுறுத்துகின்றன. நமது அரசியலமைப்புச் சட்டம், சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிக் கிறது. நாம் அதை நீர்த்துப் போகச் செய்ய வேண்டாம்" என்றும் குறிப்பிட்டது.

### நடவடிக்கை அவசியம் இல்லை

குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகள் வழங்கப்பட் டுள்ளதைப் போல, பிரிவு 51 (ஏ)-ல் அடிப்படைக் கடமைகள் உள்ளன என்கிறது அரசியலமைப்புச் சட்டம். அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டபோது, இந்தப் பிரிவு கிடையாது. 1976-ல் அமைக்கப்பட்ட ஸ்வரண் சிங் கமிட்டியின் பரிந்துரைகளின்படி இந்த அடிப்படைக் கடமைகள் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டன.

அதேசமயம், அந்தக் கடமைகளைச் செய்யத் தவறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எந்த இடத்திலும் சொல்லப் படவில்லை. தேசியக் கொடி, தேசிய கீதத்துக்கு உரிய மரியாதையை அளிக்க வேண்டும் என்பது இந்தக் கடமைகளில் ஒன்றாகக் குறிப்பிடப்பட் டுள்ளது. எந்த இடத்திலும் ‘தேசியப் பாடல்’ என்ற ஒன்று குறிப்பிடப்படவில்லை என்பது முக்கியமான அம்சம்.

இன்னொரு தீர்ப்பைக் குறிப்பிடலாம். தேசிய கீதம், தேசியக் கொடி மற்றும் தேசியப் பாடலைப் பரப்புவதற்காக ஒரு கொள்கை வகுக்கும்படி மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று பாஜக செய்தித் தொடர்பாளர் அஷ்வினி உபாத்யாய் உச்ச நீதிமன்றத்தில் இந்த ஆண்டு பிப்ரவரியில் வழக்கு தொடர்ந்தார்.

‘அரசியல் சாசனப் பிரிவு 51 (ஏ) தேசிய கீதம் மற்றும் தேசியக் கொடி குறித்து மட்டுமே குறிப்பிடுகிறது, தேசியப் பாடல் என்பது குறித்து அது குறிப்பிடாத காரணத்தால், தேசியப் பாடல் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்க முடியாது’ என்று அவர் மனுவைத் தள்ளுபடி செய்தது உச்ச நீதிமன்றம். மேலும், அலுவலகங்கள், நீதிமன்றங்கள், சட்ட மன்றம், நாடாளுமன்றம் ஆகிய இடங்களில் கட்டாயம் தேசிய கீதம் பாட வேண்டும் என்ற அவரது கோரிக்கையையும் தள்ளுபடி செய்தது.

அரசியலமைப்புச் சட்டம்தான் அனைத்துச் சட்டங்களுக்குமான மூலம். அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 141-ன் படி, உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் அனைத்து உத்தரவுகளும், இந்தியா முழுமைக்கான சட்டம் என்று கூறப்பட் டுள்ளது. அதாவது, நாடாளுமன்றம் இயற்றும் சட்டத்துக்கு இணையான அதிகாரம் உச்ச நீதிமன்ற உத்தரவுகளுக்கு உள்ளது. ஆனால், அதற்கு இணையான அதிகாரம் உயர் நீதிமன்றத் துக்கு இல்லை. உயர் நீதிமன்றத்துக்கான அதிகாரங்கள் குறித்து பிரிவு-226-ல் கூறப்பட் டுள்ளது.

அதன்படி, ஒரு உயர் நீதிமன்றத்தின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் எந்த உத்தரவை வேண்டுமானாலும், எவருக்கு வேண்டு மானாலும் பிறப்பிக்க முடியும். ஆனால், அதற்கு முன் எவருக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்படு கிறோதோ அவர்களைத் தரப்பினராக சேர்த்து அவர்களின் கருத்தையும் கேட்க வேண்டும். சட்ட மன்றத்தின் அதிகார வரம்புக்குட்பட்ட பணியை உயர் நீதிமன்றம் செய்வதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் வழி இல்லை.

### யார் கண்காணிப்பது?

தனியார் அலுவலகங்களில் மாதம் ஒரு முறை கட்டாயம் பாட வேண்டும் என்று வழங்கியுள்ள தீர்ப்பு நடைமுறைப்படுத்த முடியாத ஒன்று. எப்படி இதை மேற்பார்வை செய்யமுடியும்? யார் மேற்பார்வை செய்வது? யாரிடம் புகார் செய்வது? என்ன தண்டனை?

ஒரு சட்டம் சட்டசபையால் இயற்றப்பட்டு நடைமுறைக்கு வருகிறது என்பது அரசிதழ் மூலம் அறிவிக்கப்படுகிறது. அதனால் எல்லா மக்களுக்கும் அந்தச் சட்டம் தெரியபடுத்தியதாக அனுமானம் கொள்ள முடிகிறது. ஆனால், நீதிமன்றத் தீர்ப்பையும் அதைப் போல் எல்லா மக்களுக்கும் தெரியபடுத்தியதாக அனுமானம் கொள்ள முடியுமா? பொதுவாக நீதிமன்றத் தீர்ப்பு சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்குத்தானே தெரியும், அவர்களைத் தானே கட்டுப்படுத்தும்!

70 ஆண்டுகளுக்கு முன், அந்நிய நாட்டின் அடிமையாய் இருந்து சுதந்திர தாகத்துடன் போராடிய போதுகூட, தேசியப் பாடலைக் கட்டாயமாகப் பாடவேண்டுமென யாரையும் யாரும் நிர்ப்பந்தித்தாகத் தெரியவில்லை. அரங்குகளிலும் அலுவலகங்களிலும் மக்களைக் கட்டாயப்படுத்தி தேசியப் பாடலைப் பாட வைப்பதன் மூலம் தேச பக்தி வராது. தேசியப் பாடலைப் பாடினால்தான் தேச பக்தி உள்ளது என்று எடுத்துக்கொள்ளவும் முடியாது!

# பார்ப்பனியத்தை எதிர்த்த பசவண்ணர் இயக்கம்

**ச.சிவலிங்கம்**

*பார்ப்பனியத்தை எதிர்த்து ஜாதியற்ற அமைப்பாக உருவானதே லிங்காயத். அவர்கள் இப்போது இந்து மதத்திலிருந்து விடுவிக்கக் கோரி போராடுகின்றனர். லிங்காயத் வரலாறு தான் என்ன?*

கர்நாடகத்தில் லிங்காயத்தைத் தனிமதமாக அறிவிக்கக் கோரும் போராட்டங்களும் கன்னடக் கொடிக்கான போராட்டங்களும் விவாத மையங்களானதோடு 2018 சட்டமன்றத் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் காரணிகளாகவும் உருவெடுத்திருக்கின்றன. அடுத்தடுத்த தேர்தல் வெற்றிகளினூடே கர்நாடகத்தையும் கைப்பற்றி விடலாம் என்ற பாஜகவின் கணக்குக்குப் பெரும் தடைகளாக இப்போது உருவெடுத்திருக்கின்றன இந்த இரு பிரச்சினைகளும். குறிப்பாக 'லிங்காயத் தனி மதம்' எனும் விவகாரம் இந்துத்துவ அரசியல் கணக்குகளுக்கும் நீண்ட காலச் சவாலாக மாறியிருக்கிறது.

கி.பி. 12-ம் நூற்றாண்டில் வட கர்நாடகத்தில் உருவான வசனக்காரர்களின் இயக்கம் (பக்தி இயக்கம்) சமூகப் பண்பாட்டுத் தளத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது அனைத்து அதிகாரங்களும் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தில் இருந்த காலகட்டம் அது.

வசனக்காரர்களின் இயக்கம் அதைக் கேள்விக்கு உட்படுத்தியதோடு மட்டும் நில்லாமல், மாற்றுச் சமூகக் கட்டமைப்பை உருவாக்கவும் முனைந்தது. இந்த முரண்பாடு வர்ணாசிரம சாதி ஆதிக்க சக்திகளுக்கும் வசனக்காரர்களுக்கும் இடையில் சமரசம் செய்ய முடியாத முரண்பாடாக வளர்ந்தது என்று தேசியக் கல்லூரியின் கன்னடப் பேராசிரியர் ரங்கநாத் கண்ட்டன் குண்ட்டே கூறுகிறார். பிறப்பின் அடிப்படையிலான சாதிகளின் மதிப்பும் இழிவும், உழைப்பு பற்றிய கருத்தாக்கங்களை வசனக்காரர்களின் இயக்கம் மறு மதிப்பீடு செய்து சமூகத்தை உயிர்ப்பித்தது என்று கூறுகிறார் கன்னட ஊடகவியலாளரான பார்வதீஷ்.

**வர்ணாசிரமக் கோட்பாட்டை வசனக்காரர்கள் தகர்த்தெறிந்தனர். அனைவருக்கும் லிங்க தீட்சை கொடுத்து சகோதரத்துவத்தை நிலைநாட்டினர். இதில் ஈர்க்கப்பட்ட அனைத்து சாதி மக்களும் வசனக்காரர்களின் இயக்கத்தில் இணைந்தனர்.**

உடம்பே ஆலயம், ஆன்மாவே தெய்வம் என்ற தத்துவத்தை நடைமுறைப்படுத்தியதன் மூலம் சமூகத்தில் நிலவிய வர்ணாசிரமக் கோட்பாட்டை வசனக்காரர்கள் தகர்த்தெறிந்தனர். அனைவருக்கும் லிங்க தீட்சை கொடுத்து சகோதரத்துவத்தை நிலைநாட்டினர். இதில் ஈர்க்கப்பட்ட அனைத்து சாதி மக்களும் வசனக்காரர்களின் இயக்கத்தில் இணைந்தனர். இந்த இயக்கத்தைத் தலைமைதாங்கி வழிநடத்தியவர் பசவண்ணர். தீண்டத்தகாத மற்றும் பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்கள் சமூக விடுதலை கிடைத்த மகிழ்ச்சியில் இயக்கத்தில் இணைந்தனர் என்று மாத்தே மகாதேவி குறிப்பிடுகிறார். இவர் லிங்காயத் மதத்தை தனிமதமாக அறிவிக்கக் கோரி போராடுபவர்களில் முன்னணியில் நிற்பவர்.

அதேபோல சிதானந்த மூர்த்தியும், தீண்டப்படாத சாதியினர் அதிக எண்ணிக்கையில் பக்தி இயக்கத்தில் இணைந்ததாகத் தனது நூலில் குறிப்பிடுகிறார். இவர்களின் கருத்துகளை மெய்ப்பிப்பதாகவே வசனக்காரர்களின் இயக்க வரலாறு இருக்கின்றது. வசனக்காரர்களின் இயக்கத்தில் டோஹர கக்கய்யா (கூடை முனை பவர்), அம்பிகா சௌடய்யா (மீனவர்), ஜேடர தாசரமய்யா (நெசவாளர் - தேவாங்கா), அல்லமபிரபு (நாட்டியக்கார சாதி), காலவ்வே (தலித்), மாதார சென்னய்யா (மாதிகா), மடிவாளா மாச்சிதேவா (வண்ணார்) உள்ளிட்ட அனைத்து சாதியினரும் சரணர்களாக (பக்தர்களாக) இருந்தனர். வசனக்காரர்கள் பசவண் ணர் தலைமையில் கல்யாண் (இன்று பசவகல்யாண்) என்னும் இடத்தில் அனுபவ மண்டபத்தை (பல்வேறு தொழில் செய்வோர் தங்களது அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளும் இடம்) உருவாக்கினர். கல்யாண் நகரம் பிஜ்ஜல அரசனின் தலைநகரமாக இருந்தது. அமைச்சரவையில் பசவண்ணர் அமைச்சராக இருந்தார். அனுபவ மண்டபத்தில் அனைத்து சாதிகளைச் சேர்ந்த 730 உறுப்பினர்கள் இருந்துள்ளனர். இவர்கள் தொழிலுக்கும் உழைப்புக்கும் முன்னுரிமை கொடுத்தனர்; தொழிலே தெய்வம் என்னும் கோட்பாட்டை நம்பினர். அனுபவ மண்டபத்தைப் பற்றி ஆய்வுசெய்த சென்னப்ப உத்தங்கி என்பவர், 'அனுபவ மண்டபம் உலகின் முதல் பாராளுமன்றம்' என்று குறிப்பிட்டுள்ளார். இந்த அனுபவ மண்டபத்தின் தலைவராக அல்லம பிரபுவை நியமித்தார் பசவண்ணர்.

வர்ணாசிரம அமைப்புமுறைக்கு எதிரான இத்தகைய செயல்களை ஒடுக்க வேண்டும் என்றும் பார்ப்பனர்கள் அரசனிடம் முறையிட்டனர். வசனக்காரர்களை ஒடுக்குவதற்கு அரசன் படைகளை அனுப்பினான். கல்யாண் நகரம் புரட்சியின் மையமானது. சரணர்கள் நான்கு திசைகளிலும் தப்பி ஓடினர். சரணர்கள், மக்கள் என்று பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. பசவண்ணரையும் படைகள் துரத்தின; இறுதியில் கொல்லப்பட்டார் என்றும் கொல்லப்படவில்லை, சமாதியானார் என்ற கருத்தும் இருக்கின்றது.

தப்பி ஓடியவர்கள் தென் கன்னட மாவட்டத்தின் உலுவெ குகைகளில் தஞ்சம் புகுந்தனர். இந்த இடம் சரணர்களின் வழிபாட்டு இடமாகக் கருதப்படுகிறது. இங்கு இரண்டாவது அனுபவ மண்டபம் நிறுவப்பட்டதாகக் கூறப்படுகிறது. 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடந்த இந்தப் போர், பசவண்ணர் உருவாக்கிய மதத்துக்கு ஓரளவு பின்னடைவையும் அதே நேரத்தில் தப்பியோடிய சரணர்களின் மூலம் பரந்துபட்ட பிரச்சாரத்தையும் பெற்றதாகக் கூறுகிறார் மாத்தே மகாதேவி. பசவண்ணரின் பக்தி மரபு 17ஆம் நூற்றாண்டு வரை நீடித்துள்ளது. சண்முக சிவயோகிதான் கடைசி சரணர் என்று அவர் குறிப்பிடப்படுகிறார்.

கிருஷ்ணதேவராயருக்கு முன்னர் ஆட்சிசெய்த பிரவுடு தேவராயா என்னும் அரசனின் பாதுகாப்பில் இருந்த சித்தலிங்கேஸ்வர குரு வசனக்காரர்களின் சுவடிகளைப் பாதுகாத்துள்ளார். 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பகீரப்பா குரப்பா ஹலகட்டி என்பவர் சுவடிகளில் இருந்தவற்றை அச்சேற்றி நூல்களாக வெளியிட்டுள்ளார். 1931 முதல் 1995 வரை வாழ்ந்த லிங்காயனந்த சுவாமிகள், சுமார் 40 ஆண்டுகள் லிங்காயத்து மதம் பற்றிப் பிரச்சாரம் செய்துள்ளார். மேற்கண்ட சமூக வரலாற்று நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டும் மாத்தே மகாதேவி லிங்காயத், ஆரம்பம் முதலே தனிமதமாக, குறிப்பாக சனாதன வர்ணாசிரமத்திலிருந்து வேறுபட்டு இயங்கிவருகிறது என்கிறார். இது தொடர்பான சான்று களையும் முன்வைக்கிறார்.

1851-ம் ஆண்டிலேயே லிங்காயத் மதம் சுதந்திர மதம் என்று பேராசிரியர் எம்.ஆர்.காக்லே எழுதினார். மேலும், ஆங்கிலேயர் காலத்தில் ஆந்திரப் பிரதேசத்தில் நீதிபதியாக இருந்த சி.பி.பிரவுன் எழுதிய நூலில் 'லிங்காயத் தனி மதம்' என்று குறிப்பிட்டுள்ளார். லிங்காயத் மதத்தினர் நீதிமன்றத்தில் பகவத் கீதை மீது உறுதியெடுக்க மறுத்ததையும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். இது மதராஸ் கெஜட்டில் பதிவாகியிருப்பதையும் மாத்தே மகாதேவி குறிப்பிடுகிறார். இவ்வாறு கடந்த 800 ஆண்டுகளாக பசவண்ணரால் உருவாக்கப்பட்ட லிங்காயத் தனி மதமாகவே இருந்துவந்துள்ளது. எனவே, மத்திய அரசு அரசியல் சட்டப்பிரிவு 21-ன்படி லிங்காயத்தைத் தனி மதமாக அங்கீகரிக்க வேண்டும் என்னும் கோரிக்கையை முன்வைத்துப் போராடி வருவதாக அவர் கூறுகிறார்.

ஆந்திராவிலிருந்து கர்நாடகத்துக்குக் குடியேறிய ஆனகல் குமாரசாமி 1904-ல் வீரசைவ மகா சபையை நிறுவினார். இதே காலகட்டத்தில், சிவயோக மந்திர என்னும் அமைப்பும் உருவாக்கப்பட்டது. இது மதப் பயிற்சிப் பள்ளியாகச் செயல்பட்டது. ஆனகல் குமாரசாமிதான் சூழ்ச்சித் திட்டத்துடன் வீரசைவ லிங்காயத் என்று லிங்காயத் மதத்தைக் குறிப்பிட்டதாகவும் மாத்தே மகாதேவி குற்றம்சாட்டுகிறார். வீரசைவ மகா சபையின் நெறிமுறைகளில் முதலாவதாக இருப்பது வேத ஆகமங்கள்தான் என்றும் குறிப்பிடுகிறார்.

வீர சைவமானது வர்ணாசிரமம், சாதி அமைப்பு முறை, ஹோமம், யாகம் முதலியவற்றில் நம்பிக்கை கொண்டிருப்பதோடு எல்லா இந்து தெய்வங்களையும் நம்புகிறது. மேலும், வீரசைவர்கள் பசவண்ணரை குருவாக ஒப்புக்கொள்வதில்லை. அது மட்டுமல்லாமல் பசவண்ணருக்கும் முன்பே வீரசைவம் இருந்ததாகவும் கூறுகின்றனர். லிங்காயத் மதத்தை வீரசைவ லிங்காயத் மதம் என்று கூறுபவர்களில் முக்கியமானவர்களாக சிதானந்த மூர்த்தி, பைரப்பா போன்றவர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் இந்துத்துவா சார்பானவர்கள்.

**வர்ணாசிரம அமைப்பு முறைக்கு எதிராக பார்ப்பனர்கள் அரசனிடம் முறையிட்டனர். வசனக்காரர்களை ஒடுக்குவதற்கு அரசன் படைகளை அனுப்பினான்.**

1891, 1991 மக்கள்தொகைக் கணக்கெடுப்புகளில் முறையே 38 (மைசூர்) மற்றும் 43 (மும்பை) துணை சாதிகள் லிங்காயத்தில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதியாக 71 துணை சாதிகள் இருப்பதாக முடிவுசெய்யப்பட்டது. மேற்கண்ட சமூக வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில் லிங்காயத் என்பது தனி மதம் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. இந்தக் கோரிக்கை பலமுறை அரசிடம் வைக்கப்பட்டுள்ளது; எனவே, எங்களது கோரிக்கையை அரசியலுடன் இணைத்துப் பேசுவது சரியல்ல என்பது இதற்காகப் போராடுபவர்களின் வாதம். ஆனால், பெரும் விஸ்வரூபம் எடுத்திருக்கும் இந்த விவகாரம் எதிர்கால அரசியலைத் தீர்மானிக்கும் எல்லா அறிகுறிகளும் இப்போது கர்நாடகத்தில் தீர்க்கமாகத் தெரிகின்றன.

**குறிப்பு:** அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட கவுரி லங்கேஷ் ஒரு லிங்காயத்; லிங்காயத்துக்களை 'இந்து' மதத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற போராட்டத்தை தீவிரமாக ஆதரித்து எழுதி வந்தார்.

# ரோகிங்யா முஸ்லிம்கள் உரிமை கோரி காஞ்சியில் கழகம் ஆர்ப்பாட்டம்

காஞ்சிபுரம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் ஒருங்கிணைத்த ரோகிங்யா முஸ்லிம்கள் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்த கோரியும் இந்தியாவில் அடைக்கலம் தேடி வந்திருக்கும் அம்மக்களை இந்தியாவில் அனுமதிக்க வேண்டும் என கோரிக்கைகளை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தை கழகத் தோழர் ரவி பாரதி ஒருங்கிணைத்தார். தோழர்கள் டி.கன்னிவேல், பிரகாஷ், இராமசெயம், காஞ்சி அமுதன் (பாலாற்று பாதுகாப்பு கூட்டியக்கம்), மேகலா (மக்கள் மன்றம்), ஷாஜகான் (மனிதநேய மக்கள் கட்சி), செந்தமிழ்குமரன் (தமிழ்தேச மக்கள் கட்சி) ஆகிய தோழமை அமைப்பு தோழர்கள் உரையாற்றினர். ஏழுமலை நன்றி கூறினார்.

# ஆயுத பூஜையைக் கண்டித்து மேட்டூரில் ஆர்ப்பாட்டம்

27.09.2017 அன்று சேலம் மாவட்டம் மேட்டூரில் மத்திய மாநில அரசுகளின் நவோதயா பள்ளி திட்டம் அரசு பள்ளிகளில் யோகா வகுப்பு அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜை இவைகளை தடைசெய்ய வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் சேலம் மேற்கு மாவட்ட தலைவர் சூரியகுமார் தலைமை உரைக்குப் பின் சி. கோவிந்தராஜ் (தலைமை செயற்குழு உறுப்பினர்), அ.சக்திவேல், இரண்யா ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் மேட்டூர் ஆர்.எஸ். காவேரி கிராஸ், நங்கவள்ளி, கொளத்தூர், தார்க்காடு, காவலாண்டியூர் தோழர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.குமரப்பா நன்றி உரை நிகழ்த்தினார்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# தலித் மக்கள் மீதான படுகொலைகள்: ‘எவிடென்ஸ்’ நடத்திய பொது விசாரணை






*24-9-2017 ஞாயிறு, காலை 10-00 மணியளவில் திருச்சி, செய்ண்ட் ஜோசப் கல்லூரி நூலக அரங்கில், சமீப காலமாக தமிழகத்தில் அதிகரித்துவரும் தலித்துகள் மீதான படுகொலைகள், பின்னணி, வழக்குப் பதிவு, சட்ட நடவடிக்கைகள் போன்றவை குறித்த பொது விசாரணை நடைபெற்றது.*

இதனை தமிழகத்தில் தீண்டாமை வன் கொடுமை வழக்குகளில் முனைப்பாகத் தலையிட்டு உரிய நீதி பெறுவதிலும், பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பு, நிவாரணம், ஈடுசெய் நீதி ஆகியவற்றுக்காகவும் சிறப்பாகப் பணியாற்றி வரும் எவிடன்ஸ் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.

எவிடன்ஸ் முத்து வரவேற்புரையைத் தொடர்ந்து, எவிடன்ஸ் செயல் இயக்குநர் கதிர் பொது விசாரணையின் நோக்கம் குறித்தும், தமிழகத்தில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 15 தலித்துகள் கொலையானதையும் கடந்த ஒரு ஆண்டு காலத்தில் தலித் செயல்பாட்டாளர்கள் 25 பேர் கொலை யுண்டுள்ளதையும் குறிப்பிட்டு உரையாற்றினார். மேலும் வன்கொடுமைத் திருத்தச் சட்டம் குறித்தும், அவற்றைப் பயன் படுத்திப் பாதிக்கப்பட்டோருக்கு இடைக்கால நிவாரணம், மாதாந்திர குடும்ப உதவிநிதி பெற்றுள்ளது குறித்தும், பாதிக்கப்பட்ட தரப்பினர் துணிச்சலுடன் ஒத்துழைப்பது அதிகரித்து வருவதையும் எடுத்துரைத்தார்.

பொது விசாரணையில் பாதிக்கப்பட்டோர் நேரடியாய் சாட்சியம் வழங்கினர்.. எவிடன்ஸ் பொறுப்பாளர்கள் மேற்கொண்டுவரும் நட வடிக்கைகள், வழக்கின் நிலவரம் குறித்து விளக்கினர். பொது விசாரணை நடுவர்களாக, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, எழுத்தாளர் பவா. செல்லதுரை, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வழ்க்கறிஞர் எழில் கரோலின், முனைவர் கல்பனா கருணாகரன், மருத்துவர் சதீஷ் முத்துராம், பத்திரிக்கையாளர் இரா.வினோத், வழக்கறிஞர் சவீதா ஆகியோர் இருந்தனர். சாட்சியங்களின். வாக்கு மூலங்களைத் தொடர்ந்து விளக்கங்கள் தேவைப்படும் போது நடுவர்கள் கோரிப் பெற்றனர்.

பொது விசாரணை மாலை 5.00 மணிவரை நீடித்தது. 18 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. பொது விசாரணையை அறிய ஏராளமான மாணவர்களும், செயல் பாட்டாளர்களும், பல்வேறு இயக்கத்தினரும் வந்திருந்து பல அரிய செய்திகளை அறிந்து சென்றனர்.

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மாறாக அது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் அளிக்கப் பட்டுள்ள மாநில உரிமை. எந்த விகிதத்தில் பிரித்தளிப்பது என்பதும் ஒன்றிய அரசின் முடிவல்ல. அரசியல் அமைப்புச் சட்டத்தின் விரிவு 270ன் படி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை அமைக்கப்படும் நிதிக் குழுவின் பரிந்துரைப்படி கலால் வரி பிரித்தளிக் கப்படுகிறது. அது மட்டுமல்ல, ஒவ்வொரு மாநிலத்தின் பங்கு (இந்த 42ரூ பங்கில்) எவ்வளவு என்பதையும் நிதிக் குழு வரையறுத்துள்ளது. எடுத்துக்காட்டாக, தமிழகம் கலால் வரியின் பிரித்தளிக்கப் படும் பங்கிலிருந்து 4.023 விழுக்காடு மட்டுமே ஒன்றியத் தொகுப்பிலிருந்து பெற முடியும். 2017-18ஆம் ஆண்டு ஒன்றிய அரசு ரூ.1,00,000 கோடி கலால் வரியாக வசூலித்தால் தமிழகம் ரூ.4,023 கோடி மட்டுமே அதன் பங்காகப் பெற முடியும். தமிழகத்தில் வசூலிக்கப்படும் கலால் வரியிலிருந்து 42 விழுக் காட்டைத் தன் பங்காகப் பெற முடியாது. வசூலிக்கப்படும் அனைத்து வரியும் ஒன்றிய அரசிடம் சென்று சேர்ந்தபின் தன் பங்கை எடுத்துக் கொண்டு மீதமுள்ள 42 விழுக்காட்டுப் பங்கில் தமிழகத்தின் பங்கு வழங்கப் படும்.

அப்படியானால் 42 விழுக்காடு நிதிக்குழு பரிந்துரைத்த வண்ணம் மாநிலங்கள் பெறும்போது, ஒன்றிய அரசைக் குறை கூறுவதன் நோக்கம் என்ன ? ஒன்றிய அரசு வசூலிக்கும் அனைத்துக் கலால் வரியும் பகிரப்படும் பங்காக இருப்பதில்லை. வசூலிக்கப்படும் வரியில் பகிரப்படும் பங்கு (Divisible Pool) என்ற பகுதியும், பகிரப்படாத பகுதியும் (Indivisible Pool) இருக்கும்.

ஒன்றிய அரசு ஒரு லிட்டர் பெட்ரோல் மீது வசூலிக்கும் கலால் வரி ரூ.21.48. இதில் 42 விழுக்காடு பகிரப்படும் பங்கு என்ற தோற்றத்தைப் பக்தர்கள் பொது வெளியில் பரப்பி வருகிறார்கள். இது ஒரு பச்சைப் பொய். எப்படி ?

ஒன்றிய அரசு வசூலிக்கும் கலால் வரியான ரூ.21.48ல் மூன்று வரிகள் அடங்கியுள்ளன.

1. அடிப்படை CENVAT வரி : ரூ.8.48
2. கூடுதல் கலால் வரி : ரூ.6.00
3. சிறப்புக் கூடுதல் கலால் வரி : ரூ.7.00

இதில் இரண்டாவது பகுதியான கூடுதல் கலால் வரியாக வசூலிக்கப் படும் ரூ.6.00 ROAD CESS என்று வசூலிக்கப்படுகிறது. இது 1998ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட நிதிச்சட்டம், 2ன் படி வசூலிக்கப்படுகிறது. இந்தச் சட்டம் மிகத் தெளிவாகக் கூறுவது என்ன வென்றால், இந்தக் கூடுதல் வரி மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப் படாது என்பதாகும்.

இதே போல் மூன்றாவது வரியான சிறப்புக் கூடுதல் கலால் வரி ரூ.7.00 என்பது நிதிச் சட்டம் 2002ன் படி வசூலிக்கப்படுகிறது. இதுவும் மாநிலங் களுடன் பகிர்ந்து கொள்ளப்பட மாட்டாது. ஆக, ஒன்றிய அரசு வசூலிக்கும் ரூ.21.48 கலால் வரியில் ரூ.8.48 மட்டுமே மாநிலங்களுடன் பகிரப்படும். அதாவது ரூ.8.48ல் 42 விழுக்காடான ரூ.3.56 மட்டுமே மாநில பகிர்வுத் தொகையாகும். மீதமுள்ள ரூ.17.92ஐ ஒன்றிய அரசே வைத்துக் கொள்ளும். அதாவது ஒன்றிய அரசு வசூலிக்கும் கலால் வரியில் 83.45 விழுக்காட்டை அதுவே வைத்துக் கொள்கிறது. மீதமுள்ள 16 விழுக் காட்டைத் தான் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கிறது. உண்மை நிலவரம் இவ்வாறு இருக்க, பா.ஜ.க.வும் அதன் ஆதரவாளர்களும் வசூலாகும் கலால் வருவாயில் 42 விழுக்காட்டை மாநிலங் களுக்குச் செல்வதாகக் கூறிவருவது பச்சைப் பொய் அல்லாமல் வேறு என்ன ?

இதன் வாயிலாக, ஒன்றிய அரசு வசூலிக்கும் அடிப்படை கலால் வரியான ரூ.2,40,000 கோடியில் ரூ.99,477 கோடியை மாநிலங்களுக்குப் பகிர்ந் தளித்த பின் அது வைத்துக் கொள்வது ரூ.1,40,523 கோடி. இதுவல்லாது பகிர்ந்தளிக்காத தொகையாக அது வைத்துக் கொள்ளும் இதர கலால் வரி வருமானங்கள் (பெட்ரோல்) ரூ.1,02,550 கோடிகள். ஆக, ஒன்றிய அரசு தன் பங்காக மட்டும் ரூ.2,43,000 கோடியை வைத்துக் கொண்டு, மாநிலங்களுக்கு ரூ.99,477 கோடியை மட்டும் பகிர்கிறது. ஆனால் ஏறத்தாழச் சரி பாதியைக் கொடுப்பது போன்ற தோற்றத்தைப் பரப்பி வருகிறது.

நிதியமைச்சர் அருண் ஜெட்லி, மாநிலங்கள் தங்கள் பங்கை விட்டுக் கொடுக்கத் தயாரா எனக் கேட்பது என்ன விசித்திரம்! அதைவிட விசித்திரம் பெட்ரோலிய அமைச்சர் பெட்ரோலியத்தை ஜி.எஸ்.டி. வரித் திட்டத்துக்குள் கொண்டு வர வேண்டும் என்பது. ஜி.எஸ்.டி. வரி விதிப்பினுள் அதனைக் கொண்டு வந்தால் ஒன்றிய அரசு எவ்வளவு வரி வருவாயை இழக்கும் என்பது தெரிந் திருந்தாலும், பழியை மாநில அரசுகள் மீது சுமத்தி தாங்கள் தப்பிக்க எத்தனிப்பது மட்டுமே அதன் குறிக்கோள். இதைத்தான் இந்தப் புள்ளி விவரங்கள் சுட்டுகின்றன.

இத்தகைய பரப்புரைகளை அலசி ஆராயாமல் அமைச்சர்கள் கூறுவதை அப்படியே கிளிப்பிள்ளை போல் திரும்பக் கூறும் ஊடகங்களை என்னவென்று சொல்வது ?

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 9841489896
periyarmuzhakkam@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 2nd November 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN